

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.06.2025) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 92KW சூரிய மின் உற்பத்தி அலகு பிரிவினை திறந்து வைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, ஓமந்தூரார் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.அரவிந்த், துணை முதல்வர் மரு.லூசி நிர்மல் மடோனா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.திருவேங்கட செந்தில் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் ஸ்ரீராமுலு மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், உடனிருந்தனர்.

### சேலம் மாநகராட்சி

# அஸ்தம்பட்டியில் வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் அடிக்கல் நாட்டினார்!

சேலம், ஜூன் 26-

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்தில் வளர்ச்சி பணிகள் ரூ.5.55 கோடி மதிப்பீட்டில் மூன்று பாலம் கட்டுவதற்கும், மாநகராட்சி நான்கு மண்டலங்கள் உட்பட்ட பகுதியில் ரூ.523 இலட்சம் மதிப்பீட்டில் 79 தார்சாலை பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், அவர்கள் பூமிபூஜை செய்து பணிகளை நேற்று (25.06.2025) தொடங்கி வைத்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், அவர்கள் மாநகராட்சி பகுதியில் புதிய வளர்ச்சி பணிகளை தொடங்கி வைத்து தெரிவித்ததாவது:

அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.5ல் ஏ.டி.சி நகர் பகுதியில் வரட்டாற்றின் குறுக்கே உள்ள தரைமட்ட பாலத்தினை உயர்மட்ட பாலமாக கட்டுவதற்கு ரூ.205 இலட்சம் மதிப்பீட்டிலும், கோட்டம் எண்.15க்குட்பட்ட பகுதியில் அருண் நகர், லட்சுமி சுந்தர் நகர், வரட்டாற்றின் குறுக்கேயும், கே.எம்.எஸ் கார்டன் பகுதியில் வரட்டாற்றின் குறுக்கே ரூ.180 இலட்சம் மதிப்பீட்டில் மூலதன மானிய நிதி மற்றும் பொது நிதியில் இருந்து கட்டப்பட உள்ளது. பாலம் கட்டுவதற்கான பணிகள் இன்று (25.06.2025) பூமி பூஜை செய்து பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், மாநகராட்சி நான்கு மண்டலங்களிலும் பழுதடைந்த தார்சாலைகளை புதுப்பிக்கும் பணிகளுக்காக தமிழ்நாடு அரசால் 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.523 இலட்சம் மதிப்பீட்டில் 79 சாலை பணிகளுக்கும், கோட்டம் எண்.6ல் உள்ள இந்திரா நகரில் பூமிபூஜை செய்து தொடங்கி வைக்கப்பட்டது. இப்பணிகளை தரமானதாகவும், விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று மாநகராட்சி ஆணையாளர் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆ.இராமச்சந்திரன், ஆணையாளர் டாக்டர். மா.இளங்கோவன், மண்டலக்குழுத்தலைவர் திருமதி. செ. உமாராணி மாநகர பொறியாளர் ஆர்.செல்வநாயகம், செயற்பொறியாளர் ஆர்.செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி.த. தனலட்சுமி மற்றும் பலர் உடனிருந்தனர்.

# செஞ்சி - கட்டாங்கச்சிமேடு கிராமத்திற்கு புதிய பேருந்து சேவை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூன் 26-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுகா மேல் சேவூர் ஊராட்சி கட்டாங்கச்சி மேடு கிராமத்திற்கு பஸ் வசதி வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று செஞ்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையத்திலிருந்து கட்டாங்கச்சிமேடு கிராமத்திற்கு புதிய பேருந்து சேவை தொடக்க விழா நடைபெற்றது.

செஞ்சி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி அரசு போக்குவரத்து கழக பணிமனை மேலாளர்சுரேஷ் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கட்டாங்கச்சிமேடு கிராமத்திற்கு புதிய பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய கவுன்சிலர் மாரிமுத்து, தொ.மு.ச. நிர்வாகிகள் லூர்து இமானுவேல் அரிகிருஷ்ணன், தியாகராஜன், காதர் நவாஸ், தமிழ்மணி, ராஜேந்திரன், கணேசன் சர்பூதீன், விநாயகம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரோமியன், துணை அமைப்பாளர் பிரபு, நிர்வாகிகள் வாசு, தொண்டரணி பாஷா, பிரபா, இஸ்மாயில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**புதிய வணிக அங்காடி திறப்பு!**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 4 கோடியே 23 லட்சம் மதிப்பீட்டில் புதிய தினசரிஅங்காடி வணிக வளாகம் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார்.

திண்டிவனம் நகராட்சி ஆணையர் குமரன், துணைச் சேர்மன் ராஜலட்சுமி வெற்றிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வார்டு கவுன்சிலர் அரும்பு குணசேகரன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு புதிய அங்காடி வணிக வளாகம் கட்டுவதற்கு பணியைத் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,மரக்காணம் ஒன்றிய துணை சேர்மன் பழனி, நகராட்சி பொறியாளர் சரோஜா, பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,நகர மன்ற உறுப்பினர்கள்எம் . டி. பாபு, சதீஷ், ரேணுகா, ஷேக் தில் ஷாத் பேகம், சீனிராஜ், பாஸ்கர், தீபா விக்னேஷ்வர் சிங், வளர்மதி ராஜசக்தி, புனிதா ராஜேந்திரன், ரம்யா ராஜா, நகர நிர்வாகிகள் வி. எஸ். முருகன், சையத் கௌவுஸ், லூர்து சாமி, இப்ராகிம், ரவிச்சந்திரன், அப்சர்பேக், ஏழுமலை, ரவி, சிவகாமி, சபியுல்லா, டி.கே.பி.ரமேஷ், பாஸ்கர், கௌதமன் ஆடிட்டர் பிரகாஷ், அசோக் குமார், முஸ்தபா, சின்னதுரை, ஆறுமுகம், ராஜேந்திரன், சூரிய பிரகாஷ், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை மாவட்ட

# முரசொலி நிருபர் என்.அண்ணாதுரை மாமியார் ஞானபுஷ்பம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

புதுக்கோட்டை, ஜூன். 26-

புதுக்கோட்டை மாவட்ட முரசொலி நிருபர் என்.அண்ணாதுரை மாமியாரும், காலம் சென்ற ஞானமுத்து மனைவியும், காலம் சென்ற ஞானசெல்வி, காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளர் ஞா. அந்தோணி செல்வம் ஆகியோரது தாயாருமான ஞா.ஞானபுஷ்பம் வயது 80, நேற்று முன்தினம் (24.06.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 3 மணியளவில் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மறைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவரது உடல் பொது மக்கள் பார்வைக்காக இறைவன் நகர், முள்ளிப்பட்டியில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டது. தகவல் அறிந்ததும் உறவினர்கள், பொதுமக்கள், கழகத்தினர் ஏராளமானோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள். மதியம் 2 மணிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாலை 4 மணியளவில் பெட்டைவாய்த்தலை கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 49வது வட்ட பகுதி பிரதிநிதி பா.சுதாகர் தலைமையில் பகுதிச்செயலாளர் இரா. செந்தில்குமார் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் அசைவ உணவு வழங்கி நலஉதவிகள் வழங்கினர்.உடன் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, ஜி.வனிதா, ஜி.கோதண்டம், இ.கதிரவன், கே.பாஸ்கரன், மற்றும் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கிழக்கு பகுதி நிர்வாகிகள், வட்டசெயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பவளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கலந்து கொண்டனர். ஆர்டிஒ.ஏ.குமார், ஆர்.கோபிநாத், த.கு.பன்னீர்செல்வம், ஆகியோர் நன்றி கூறினர்.



# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 27.06.2025 | எருமப்பட்டி ஒன்றியம் | கோணங்கிப்பட்டி | ஒசூர் அப்துல் ரகுமான் பாரி<br>சீ.தருண்குமார் |
| 2 | | எருமப்பட்டி பேரூர் | எருமப்பட்டி கைகாட்டி | பவித்ரம் கண்ணன்<br>ம.மோகநிதி |
| 3 | 28.06.2025 | மோகனூர் பேரூர் | அண்ணா சிலை அருகில் | ஒசூர் அப்துல் ரகுமான் பாரி<br>சீ.தருண்குமார் |
| 4 | | மோகனூர் ஒன்றியம் | அணியாபுரம் பேருந்து நிறுத்தம் | பவித்ரம் கண்ணன்<br>சீ.தருண்குமார் |
| 5 | 29.06.2025 | சேந்தமங்கலம் ஒன்றியம் | பேளுக்குறிச்சி பேருந்து நிறுத்தம் | ஒசூர் அப்துல் ரகுமான் பாரி<br>ச.பரத் |
| 6 | | காளப்பநாயக்கன்பட்டி பேரூர் | வ.உ.சி. திடல்,<br>காளப்பநாயக்கன்பட்டி. | பூலாவரி எம்.ஜெயவேல்<br>சீ.தருண்குமார் |
| 7 | | சேந்தமங்கலம் பேரூர் | சின்னதேர் பேருந்து நிறுத்தம் | ஒசூர் அப்துல் ரகுமான் பாரி<br>ச.பரத் |
| 8 | 30.06.2025 | இராசிபுரம் ஒன்றியம் | ஆண்டகளூர் கேட் பேருந்து நிறுத்தம் அருகில்,<br>குருக்கபுரம் ஊராட்சி. | பவித்ரம் கண்ணன்<br>ச.பரத் |
| 9 | | பிள்ளாநல்லூர் பேரூர் | பிள்ளாநல்லூர் பேருந்து நிறுத்தம் | பூலாவரி எம்.ஜெயவேல்<br>ச.பரத் |
| 10 | 01.07.2025 | வெண்ணந்தூர் ஒன்றியம் | மாரியம்மன் கோயில் அருகில்,<br>வடுகம்பாளையம், மின்னக்கல் ஊராட்சி. | ஒசூர் அப்துல் ரகுமான் பாரி<br>சீ.தருண்குமார் |
| 11 | | வெண்ணந்தூர் பேரூர் | காமராஜர் தினசரி மார்க்கெட் அருகில், வெண்ணந்தூர். | பூலாவரி எம்.ஜெயவேல்<br>ச.பரத் |
| 12 | | அத்தனூர் பேரூர் | சின்னப்பாவடி சந்தை அருகில்,<br>அத்தனூர். | ஒசூர் அப்துல் ரகுமான் பாரி<br>சீ.தருண்குமார் |
| 13 | 02.07.2025 | புதுச்சத்திரம் வடக்கு ஒன்றியம் | நவணி பள்ளிப்பட்டி | பவித்ரம் கண்ணன்<br>க.நந்தகுமார் |
| 14 | | புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியம் | புதன்சந்தை பாலம் அருகில் | நாமக்கல் இராஜகோபால்<br>ச.பரத் |
| 15 | 03.07.2025 | நாமகிரிப்பேட்டை ஒன்றியம் | மங்களபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் | பவித்ரம் கண்ணன்<br>ச.பரத் |
| 16 | | நாமகிரிப்பேட்டை பேரூர் | நாமகிரிப்பேட்டை பேருந்து நிறுத்தம் அருகில் | பூலாவரி எம்.ஜெயவேல்<br>க.நந்தகுமார் |
| 17 | 04.07.2025 | இரா.புதுப்பட்டி பேரூர் | பேருந்து நிலையம் அருகில்,<br>இரா.புதுப்பட்டி. | பூலாவரி எம்.ஜெயவேல்<br>சீ.தருண்குமார் |
| 18 | | சீராப்பள்ளி பேரூர் | சீராப்பள்ளி பேருந்து நிறுத்தம் அருகில் | பவித்ரம் கண்ணன்<br>க.நந்தகுமார் |
| 19 | 05.07.2025 | நாமக்கல் மேற்கு நகரம் | முருகன் கோயில் பேருந்து நிறுத்தம், சேலம் சாலை. | நாமக்கல் இராஜகோபால்<br>ச.பரத் |
| 20 | | நாமக்கல் கிழக்கு நகரம் | மஜீத் தெரு | பவித்ரம் கண்ணன்<br>சீ.தருண்குமார் |
| 21 | 06.07.2025 | நாமக்கல் ஒன்றியம் | வள்ளிபுரம் பேருந்து நிறுத்தம் | பவித்ரம் கண்ணன்<br>ம.மோகநிதி |
| 22 | | நாமக்கல் தெற்கு நகரம் | கொண்டிசெட்டிப்பட்டி | நாமக்கல் இராஜகோபால்<br>சீ.தருண்குமார் |
| 23 | 07.07.2025 | பட்டணம் பேரூர் | பட்டணம் பேருந்து நிறுத்தம் அருகில் | பவித்ரம் கண்ணன்<br>ம.மோகநிதி |
| 24 | | இராசிபுரம் நகரம் | கதர் கடை அருகில்,<br>பெரிய கடைவீதி. | பூலாவரி எம்.ஜெயவேல்<br>க.நந்தகுமார் |
| 25 | 08.07.2025 | கொல்லிமலை ஒன்றியம் | செங்கரை | பவித்ரம் கண்ணன்<br>க.நந்தகுமார் |

**நாமக்கல்**

நாள் : 25.06.2025

கலைஞர் 100 1924 - 2023





தலைமைச் செயலகத்தில் நேற்று (24.06.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தலைமையில் தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்திற்கும், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்திற்கும் (FEFSI) இடையே ஏற்பட்டுள்ள இணக்கப் பற்றாக்குறையை சரிசெய்யும் பொருட்டு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.